விஜயபாரதம்
மின்னனு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆவணி - 27 ஞாயிறு 12.09.2021 மலர் - 2, இதழ் - 159

# மருத்துவ மாணவர் சேர்க்கையை தடுக்கும் தி.மு.க



தமிழகத்தில் உள்ள ஏழை எளியோருக்கு உயர்தர சிகிச்சைகள் கிடைக்கவும் மருத்துவம் படிக்க விழையும் மாணவர்கள் பயன்பெறவும் மதுரை தோப்பூர் பகுதியில் ரூ.1,264 கோடி செலவில் 750 படுக்கைகளுடன் எய்ம்ஸ் மருத்துவமனை, மருத்துவக் கல்லூரி அமைக்க பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்.

மருத்துவக் கல்லூரி கட்ட நிலம் கையகப்படுத்தியதைத் தொடர்ந்து, மதுரை எய்ம்ஸ் மருத்துமனை சார்பில் மருத்துவம் படிக்க 150 புதிய மாணவர்களுக்கான சேர்க்கையை நடத்திக் கொள்ளலாம், கல்லூரிக் கட்டடம் இல்லாத பட்சத்தில் வேறு இடத்தில் வகுப்புகளை தொடங்கலாம், மாணவர்கள் 2 ஆண்டுகள் படித்து முடிக்கும்போது, எய்ம்ஸ் வளாகத்தில் கல்லூரி கட்டி முடிக்கப்படும், அதன்பிறகு மாணவர்களை இடமாற்றம் செய்து கொள்ளலாம் என்று மத்திய அரசு, தமிழகத்தை ஆளும் தி.மு.க அரசுக்கு கடிதம் அனுப்பியது.

இதற்காக, ஜிப்மர் மருத்துவமனை, மதுரை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தனியார் கலைக் கல்லூரிகளில் அல்லது தனியார் மருத்துவக் கல்லூரிகளில் புதிய மாணவர்களை சேர்த்துக் கொள்ளலாம் என்றும் ஆலோசனை வழங்கப்பட்டது. ஆனால், இதில் எந்த யோசனையும் ஏற்றுக்கொள்ள உகந்ததாக இல்லை என்றுகூறி தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்ரமணியம் மறுத்துள்ளார்.

மத்திய அரசு, தமிழகத்தைச் சேர்ந்த ஏழை, எளிய மாணவர்கள் மருத்துவக் கல்வி பயில 150 மாணவர்களுக்கு வாய்ப்பு அளித்தும், அதனை பயன்படுத்திக் கொள்ள தி.மு.க அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது வருத்தத்திற்குரியது. எய்ம்ஸ் கட்டப்படும் மற்ற மாநிலங்களில் தற்காலிக இடங்களில் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தங்கள் படிப்பினைத் தொடங்கிவிட்டார்கள். கட்டடங்கள் கட்டி முடிக்கும்போது அவர்கள் புதிய கல்லூரியில் தங்கள் படிப்பினைத் தொடர்வார்கள். திருச்சியில் ஐ.ஐ.எம் தொடங்கியபோது, கட்டுமானத்திற்கு முன்பே புதிய மாணவர்கள் நிட் (NIIT)ல் கல்வி பயின்றார்கள்.

ஆகவே மாநில அரசு, மத்திய அரசின் ஒவ்வொரு செயலுக்கும் எதிர் நிலை எடுத்து போராடிக்கொண்டு இருந்தால் மாநிலத்தின் மக்கள் நலன் பாதிக்கப்படும் என்பதை உணர்ந்து, மத்திய அரசுடன் மோதல் போக்கை விடுத்து உடனடியாக 150 ஏழை, எளிய மாணவர்கள் மருத்துவக் கல்வி பயில மாநில அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக அரசை பா.ஜ.க சார்பில் கேட்டுக் கொள்கிறேன்' என தமிழக பா.ஜ.க மாநிலத் தலைவர் அண்ணாமலை கேட்டுக்கொண்டுள்ளார்.

# பனாரசில் பாரதியார் ஆய்விருக்கை



குஜராத்தில் பின்தங்கிய பிரிவினருக்கு கல்வி, வேலைவாய்ப்புகளுக்கான தொழிற்பயிற்சி அளிக்க உருவாக்கப்பட்ட 'சர்தார் பவன்' துவக்க நிகழ்ச்சியில் வீடியோ கான்பரன்சிங் முறையில் கலந்துகொண்டார் பிரதமர் மோடி. அப்போது அவர், 'சர்தார் வல்லபாய் படேல் நமது பாரதத்தின் பெருமை. செப்டம்பர் 11 வரலாற்றில் நினைவு கூரத்தக்க நாள். மனித நேயத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்ட தினம் இது. அதேநேரத்தில், நமக்கு மனித நேயம் குறித்தும் பாடம் இதில் கிடைத்தது. இதே நாளில்தான் சிகாகோ நகரில், மனிதநேயத்தின் பண்புகள் குறித்து விவேகானந்தர் பேசினார்' என தெரிவித்தார். மேலும், 'ஆராய்ச்சியாளர்கள், மாணவர்களுக்காக, தமிழ் படிப்புகள் தொடர்பாக பனாரஸ் ஹிந்து பல்கலைக்கழகத்தில் சுப்ரமணிய பாரதியார் பெயரில் தமிழ் ஆய்வு இருக்கை ஒன்று அமைக்கப்படும்' என்றும் பிரதமர் மோடி கூறினார்.

# தமிழகத்திற்கு புதிய ஆளுனர்



தமிழகத்தின் புதிய கவர்னராக இதுவரை நாகலாந்து மாநில கவர்னராக இருந்த ரவீந்திர நாராயண ரவி என்கிற ஆர். என் ரவி நியமிக்கப்பட்டு இருக்கிறார். பீகார் மாநிலத்தை சேர்ந்தவரான இவர், முன்னாள் ஐ.பி.எஸ் அதிகாரி, நமது அண்டை மாநிலமான கேரளாவில்தான் இவரது முதல் பணி துவக்கம். ஐ.பி உள்ளிட்ட உளவுத்துறைகளில் பணியாற்றிய அனுபவம் வாய்ந்தவர். முன்னாள் தேசிய பாதுகாப்பு துணைத்தலைவராகவும் இருந்துள்ளார். நாகாலாந்தில் செயல்பட்டு வந்த பல கம்யூனிச நக்சலைட் பயங்கரவாத குழுக்களை சாம, தான, பேத, தண்டம் என்ற அனைத்து முறைகளையும் கையாண்டு அடக்கி அமைதியை உருவாக்கியவர். 1,500க்கும் மேற்பட்ட பாதுகாப்புப் படையினரை கொன்ற நாகா பயங்கரவாத இயக்கத்தில் மிகப்பெரிய அமைப்பான என்.எஸ்.சி.என்ஐ.எம் அமைப்பை ஒரே வருடத்தில் ஒடுக்கியவர். வடகிழக்கு மாநிலங்களில் பயங்கரவாதிகளின் 50 வருட துப்பாக்கி சத்தத்தை வெகுவாக குறைத்ததில் பெரும்பங்காற்றியவர் இவர்' என பல பெருமைகளை பெற்றிருக்கும் இவரது பணி சிறக்க வாழ்த்துகள்....

# விநாயகரை இழிவுபடுத்திய தி.மு.க. அரசு



தி.மு.க தலைமையிலான தமிழக அரசு, கொரோனாவை காரணம் காட்டி தமிழகத்தில் பொது இடங்களில் விநாயகர் சிலைகளை வைக்கத் தடை விதித்தது. புதுவை, கர்நாடகா என அண்டை மாநிலங்களில் அம்மாநில, மத்திய அரசுகளின் கொரோனா வழிகாட்டுதல்களை கடைபிடித்து விநாயகர் சிலைகள் வைத்து வழிபாடு செய்யப்பட்டன. ஆனால், தமிழகத்தை ஆளும் தி.மு.க அரசு, சிறுபான்மையினரை திருப்திபடுத்தவும், தனது நாத்திக, திராவிட சித்தாந்தத்தை பறைசாற்றவுமே இந்த தடையை விதித்துள்ளது என்றே கருதப்படுகிறது.

பொது இடத்தில் மட்டும்தானே தடை? ஆனால், அரசின் காவல்துறை, வட்டாட்சியர், கிராம நிர்வாக அலுவலர் உள்ளிட்ட அதிகாரிகள், பொது இடத்தில் மட்டுமல்ல, தனியார் இடங்களில் வைக்கப்பட்ட சிலைகளையும், விற்பனைக்காக வைக்கப்பட்ட விநாயகர் சிலைகளையும் பறிமுதல் செய்தனர் அதிகாரிகள். விநாயகர் சிலைகளை வைப்பதற்கு முன்பும் சரி, வைத்த பின்பும் சரி அரசு அதிகாரிகள் ஹிந்து அமைப்பினருக்குக் கொடுத்த இடைஞ்சல்கள், அவற்றை கைப்பற்றி குப்பை லாரி உள்ளிட்ட வாகனங்களில் எடுத்து சென்ற விதம், சிலைகளை உடைத்தது, களிமண் சிலை செய்து பிழைக்கும் ஏழைகளின் வயிற்றில் அடித்தது, ஹிந்து அமைப்பினரை கைது செய்தது என அவர்கள் நடந்துகொண்ட விதம் அனைத்தும், அதிகாரிகள் தி.மு.கவின் வட்ட செயலாளர்களாகவே மாறிவிட்டார்களோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது. அரசு, அரசியல்வாதிகள் மாறிக்கொண்டே இருப்பார்கள். ஆனால், அதிகாரிகள் பணி ஓய்வு பெறும்வரை அதிகாரிகள்தான். குடும்பம், ஜாதி, மதம், கட்சி பேதமின்றி அனைவருக்கும் பொதுவாக சட்டப்படி நடக்க கடைப்பட்டவர்கள் அதிகாரிகள். ஆனால்,

இதே ஹிந்து விரோத தி.மு.க அரசும், அதன் ஏவலாளிகளான அதிகாரிகளும், முஸ்லிம்களின் பக்ரித் பண்டிகை, கிறிஸ்தவர்களின் விழாக்களில் இத்தனை கெடுபிடிகள் காட்டினார்களா? அவர்கள் அனைவரும் கொரோனா வழிகாட்டுதல்களையும் முறையாக பின்பற்றினார்களா, அதில் விதி மீறியவர்களில் எத்தனை பேர் மீது தி.மு.க அரசு வழக்கு, கைது என இதுவரை நடவடிக்கை எடுத்துள்ளது? அவர்களின் விழாக்கள் சிறப்பாகத்தானே நடைபெற்றன, அதற்கு ஆதரவும் பாதுகாப்பும் அளித்தவர்களும் இவர்கள்தானே, அப்போது எல்லாம் பரவாத கொரோனா ஹிந்துக்களின் விழாக்களில் மட்டுமே பரவுமா?

தமிழகத்தில், ஹிந்துக்கள் எல்லாம் என்ன இரண்டாம்தர குடிமக்களா, இந்த நிகழ்வுகள் கொரானா பரவலை தடுக்க மட்டுமே நடக்கிறது என ஹிந்துக்கள் நம்ப வேண்டுமா?

# குவாட் மாநாட்டில் பிரதமர் மோடி



பாரதம், ஜப்பான் ஆஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகள் இணைந்து துவக்கிய 'குவாட்' அமைப்பின் மாநாடு வரும் 24ம் தேதி அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் நடைபெற உள்ளது. இதில் கலந்து கொள்வதற்காக பிரதமர் மோடிவரும் 2ல் அமெரிக்கா செல்ல உள்ளார். இந்த சுற்றுப்பயணத்தில் அமெரிக்க அதிபர் ஜோ பைடனையும் சந்தித்து பேசுகிறார் மோடி. இதனையடுத்து 25ம் தேதி நியூயார்க்கில் நடைபெறும் ஐ.நா சபை கூட்டத்திலும் பங்கேற்கிறார்.

# தி.மு.கவில் பதவிகள் விற்பனைக்கு




மதுரையில் உள்ள மாவட்ட திமுகவில் கட்சிப் பொறுப்புகள் ஒதுக்குவதில் முறைகேடு நடப்பதாக அக்கட்சியின் தொண்டர்கள் வேதனையடைந்துள்ளனர். தி.மு.கவின் பதவிகளை மாவட்டத்தில் உள்ள முக்கிய கட்சி நிர்வாகிகள், பணத்தை பெற்றுக் கொண்டு சிபாரிசு செய்கின்றனர் எனக் கூறப்படுகிறது. தி.மு.க நிர்வாகிகளின் இச்செயலைக் கண்டிக்கும் விதமாக, மதுரை மாநகர் வடக்கு பகுதி முழுவதும், தி.மு.க பதவிகள் விற்பனைக்கு இருப்பதாக போஸ்டர் அடித்து ஒட்டியுள்ளனர் அக்கட்சியினர். இது தொடர்பான புகைப்படம் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. அந்த போஸ்டரில், 'தி.மு.க பதவிகளை பெறுவதற்கு தகுதியாக, குண்டர் சட்டத்தின் கீழ் சிறை சென்றிருக்க வேண்டும், மதுரை மாநகர் வடக்கு மாவட்ட இளைஞரணி பொறுப்பிற்கு ரூ.5 லட்சம், மதுரை மாநகர் வடக்கு மாவட்ட பகுதி செயலாளர் பொறுப்பிற்கு ரூ.3 லட்சம். மதுரை மாநகர் வடக்கு மாவட்டம் பிரதிநிதி மற்றும் மதுரை மாவட்ட வட்ட செயலாளர் பொறுப்புகளுக்கு ரூ.2.50 லட்சம். பணம்இருந்தால் பதவி உண்டு, பகுதிக்குள் இருக்க வேண்டிய அவசியமில்லை என்றும், உழைத்தவனுக்கு ஒன்றுமில்லை, பணம் இருந்தால் கட்டாயம் பதவி உண்டு' என்பது போன்ற வாசகங்கள் இடம் பெற்றுள்ளன.

# இம்மானுவேல் சேகரனாருக்கு அஞ்சலி



வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் கலந்து கொண்டவர், ஒடுக்கப்பட்டவர்களின் உயர்வுக்காக பாடுபட்டவர், அரசியலுக்குஅப்பாற்பட்டதலைவர் இம்மானுவேல் சேகரனார் நினைவு தினத்தையொட்டி பரமக்குடியில் அவர் நினைவிடத்தில் பா.ஜ.க சார்பில் மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தினார் தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை. அவருடன் மத்திய இணை அமைச்சர் முருகன் உள்ளிட்ட தலைவர்கள், தொண்டர்கள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

# வேளாண் ஏற்றுமதியில் பால் பொருட்கள்



வேளாண்துறை ஏற்றுமதியாளர்களின் சரக்கு போக்குவரத்து செலவை குறைக்க, டி.எம்.ஏ எனப்படும் சரக்கு போக்குவரத்து கட்டணச் சலுகை திட்டத்தை மத்திய அரசு கடந்த 2019ல் அறிமுகப்படுத்தியது. இதன்படி, வட அமெரிக்கா, சில ஐரோப்பிய நாடுகளுக்கு வேளாண் பொருட்களை ஏற்றுமதி செய்தால், கடல் வழி சரக்கு போக்குவரத்து செலவில், 50 சதவீதமும் விமான சரக்கு போக்குவரத்து செலவில் 100 சதவீதத்தையும் மத்திய அரசு ஏற்கிறது. மேலும், வேளாண் விளைபொருட்களை வெளிநாடுகளில் விற்பனை செய்வதற்கான ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் அரசு வழங்குகிறது. இந்நிலையில், இந்த திட்டத்தில் பால் பண்ணைப் பொருட்களையும் சேர்க்க மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. இதனால், பால் பண்ணைப் பொருட்களை ஏற்றுமதி செய்வோரின் சரக்கு போக்குவரத்து செலவுகள் பெருமளவு குறையும். இத்திட்டம், 2022 மார்ச் 31வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும், ஏற்றுமதியாளர்களுக்கு திரும்ப அளிக்க வேண்டிய வரி நிலுவையில், 56 ஆயிரத்து 27 கோடி ரூபாய் திரும்ப வழங்கப்படும் என்றும் மத்திய அரசு அறிவித்துள்ளது. இதற்கு ஏற்றுமதியாளர்கள் கூட்டமைப்பு வரவேற்பு தெரிவித்துள்ளது.

# இறைச்சி மதுபானத் தடை

ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தியையொட்டி மதுராவுக்கு சென்று கிருஷ்ணரை வணங்கிய உத்தர பிரதேச முதல்வர் யோகி ஆதித்தியநாத், மதுராவில் இறைச்சி மற்றும் மது விற்பனையை தடை செய்ய வேண்டும், மதுரா, பிருந்தாவனம் பகுதியை ஒரு சிறந்த யாத்திரை தலமாக வளர்க்க வேண்டும், இதற்காக நிதி ஒதுக்குவதில் எந்த பிரச்சனையும் இருக்காது என்று தெரிவித்திருந்தார். இந்நிலையில், உத்தரபிரதேச அரசு கடந்த செப்டம்பர் 10 அன்று, மதுரா, பிருந்தாவனம் மற்றும் அதைச் சுற்றியுள்ள 10 சதுர கி.மீ பகுதிகளில் உள்ள மொத்த 22 நகராட்சி வார்டுகளிலும் மது மற்றும் இறைச்சி விற்பனைக்கு தடை விதிக்கும் அறிவிப்பை வெளியிட்டது. அந்த பகுதி முழுவதும் யாத்திரை தலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# முஸ்லிம்களின் ஜிஹாத் பாதிரி புகார்



கோட்டயம் மாவட்டத்தில் உள்ள மார்த் மரியம் யாத்திரை தேவாலயத்தில் அதன் பேராயர் ஜோசஃப் கள்ளரங்காட்டு உரையாற்றும்போது, 'லவ் ஜிகாத், போதைப் பொருள் ஜிஹாத் ஆகிய இரு வகையான ஜிஹாத்களை முஸ்லிம் இளைஞர்கள் கையில் எடுக்கின்றனர். முஸ்லீம் அல்லாத இளம் பெண்கள், இளம் ஆண்களை குறிவைத்து அவர்களை போதைப் பொருட்களுக்கு அடிமையாக்குகின்றனர். இதற்காக, அதி தீவிர ஜிஹாதிகள் ஓட்டல்கள், ஐஸ்கிரீம் பார்லர்களில், பல்வேறு வைகயான மருந்துகள் விற்பனை செய்யப்படுகிறது. முஸ்லிம் அல்லாதவர்களைக் கெடுப்பதற்காக அவர்கள் பல்வேறு வகையான மருந்துகளை ஆயுதமாகப் பயன்படுத்துகிறார்கள். போதைப் பார்ட்டிகளில் கைப்பற்றப்பட்ட மருந்துகளின் மூலம் இந்த உண்மைகள் வெளியே தெரிய வந்துள்ளது. கேரள இளைஞர்கள் முன்னெப்போதும் இல்லாத நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். முஸ்லீம் அல்லாதவர்கள் அழிக்கப்பட வேண்டும் என்பதுதான் ஜிஹாதிகளின் பார்வை' என தெரிவித்துள்ளார். அவரின் இக்கருத்து கேரளாவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# கொரோனா தயார் நிலை ஆய்வு

நாட்டில் கொரோனா பரவல் குறித்து ஆய்வு செய்யப் பிரதமர் மோடி தலைமையில் உயர்மட்டக் கூட்டம் நடைபெற்றது. இதில், கொரோனா பரவல், சுகாதார அமைப்புகளின் தயார்நிலை, ஆக்ஸிஜன் இருப்பு, கொரோனா தடுப்பூசிகளின் உற்பத்தி, விநியோகம், குழந்தைகள் சிகிச்சைக்கான ஏற்பாடுகள், அவற்றை அதிகரித்தல் உள்ளிட்டவை குறித்து இக்கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது. மகாராஷ்டிரா, கேரள மாநிலங்களிலும், மற்ற மாநிலங்களில் உள்ள சில பகுதிகளிலும் அதிக அளவில் பாதிப்புகள் உள்ளது குறித்தும் விவாதிக்கப்பட்டது. அப்போது பேசிய பிரதமர் மோடி, 'நாடு முழுவதும் போதுமான பரிசோதனையை உறுதி செய்ய வேண்டும். ஆக்ஸிஜன் செறிவூட்டிகள், சிலிண்டர்கள், பி.எஸ்.ஏ ஆலைகள் உட்பட ஆக்ஸிஜன் அதிகளவு கிடைக்கும் சூழலை விரைவாக மேம்படுத்த வேண்டும். மாநிலங்களுக்குத் தங்கு தடையின்றி ஆக்சிஜன் கிடைப்பதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும். தடுப்பூசி போடும் பணியைத் தீவிரப்படுத்த வேண்டும்' என்று அறிவுறுத்தினார். மேலும் மாநிலங்களுக்கு சுமார் ஒரு லட்சம் ஆக்சிஜன் செறிவூட்டிகள், மூன்று லட்சம் ஆக்சிஜன் சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.



# உணவு பதப்படுத்தும் திட்டங்கள்

தமிழகம், உத்தரப்பிரதேசம், ஆந்திரப்பிரதேசத்தில் ரூ 164.66 கோடி மதிப்பிலான ஏழு உணவு பதப்படுத்தல் திட்டங்களை மத்திய உணவு பதப்படுத்தல் அமைச்சர் பசுபதி குமார் பராஸ் தொடங்கி வைத்தார். உணவு பதப்படுத்தல் அமைச்சகத்தால் ரூ 27.99 கோடி மானியத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதனால் 3,100 பேருக்கு நேரடி மறைமுக வேலைவாய்ப்புகள் கிடைக்கும். இதனால் இப்பகுதிகளில் வசிக்கும் சுமார் 16,500 விவசாயிகள் பயனடைவார்கள். இதில், ஈரோடு மாவட்டத்தின் புஞ்சை கிளாம்பாடியில் எஸ்.கே.எம் எக் புராடக்ட்ஸ் எக்ஸ்போர்ட் (இந்தியா) லிமிடெட் நிறுவனத்தின் ரூ 15.10 கோடி மதிப்பிலான உணவு பதப்படுத்தல் பிரிவு. திருப்பூர் மாவட்டத்தின் சிவன்மலை கிராமத்தில் உள்ள இந்திய உணவு பூங்காவில் சாம்சன் சி.என்.ஓ இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் ரூ 6.41 கோடி மதிப்பிலான உணவு பதப்படுத்தல் பிரிவு உள்ளிட்டவையும் அடங்கும்.



# பைபிள் விநியோகம்

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் அருகே தேன்கனிக்கோட்டையில் செவன்த்டே அட்வென்டிஸ்ட் பள்ளி செயல்பட்டு வருகிறது. இந்த பள்ளியின் செவன்த்டே அட்வென்டிஸ்ட் அறக்கட்டளை சார்பில் முக கவசம், உணவுப் பொட்டலங்கள் உள்ளிட்டவை கொரோனா நிவாரணமாக வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. ஆனால் இந்த நிகழ்வில் பைபிள் மற்றும் கிறிஸ்தவ மதபுத்தகங்கள் நிவாரணப் பொருட்களுடன் விநியோகிக்கப்பட்டுள்ளன. இதை அறிந்த விஷ்வ ஹிந்து பரிஷத் உள்ளிட்ட பல ஹிந்து அமைப்பினர் அங்கிருந்தவர்களிடம் கேட்டனர். கொரோனா விதிமுறைகளை மீறி கூட்டம் கூட்டியதாகவும் மதமாற்றம் செய்ய முயல்வதாகவும் காவல்துறையில் புகார் அளித்துள்ளனர். இதனையடுத்து செவன்த்டே அட்வென்டிஸ்ட் பள்ளி அறக்கட்டளை இயக்குனர் பண்டிட் விஸ்வா, பள்ளி மேலாளர் ஜெபராஜன், அந்தோணிதாஸ் உட்பட ஏழு பேர் மீது காவல்துறையினர் வழக்கு பதிவு செய்துள்ளனர்.



# காமெடி செய்யும் ராகுல்



காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, ஜம்முவில் உள்ள வைஷ்ணவி தேவி சன்னதிக்கு யாத்திரையாகச் சென்றார். பின்னர் ஜம்முவில் நடந்த கூட்டத்தில் பங்கேற்று பேசிய ராகுல், 'நான் வைஷ்ணவி தேவியிடம் பிரார்த்தனை செய்ய வந்துள்ளேன். நான் அரசியல் கருத்துக்களையும் கூற விரும்பவில்லை. நான் ஒரு காஷ்மீர் பண்டிட். என் குடும்பம் காஷ்மீர் பண்டிட். காஷ்மீர் பண்டிட்டுகளின் பிரதிநிதிகள் என்னைச் சந்தித்தனர். காங்கிரஸ் அவர்களுக்காக பல நலத்திட்டங்களை அமல்படுத்தியது. ஆனால் பா.ஜ.க ஒன்றும் செய்யவில்லை. நான் அவர்களுக்காக ஏதாவது செய்வேன்' என்று பேசி அங்குள்ளவர்களை அதிர்ச்சி அடைய வைத்துள்ளார். 1990களில் காங்கிரஸ் ஆட்சியில்தான் காஷ்மீர பண்டிட்டுகள் அம்மாநிலத்தை விட்டு துரத்தப்பட்டனர். கொலை, கற்பழிப்பு, சொத்துகள் சூறையாடல் என பல்லாயிரம் பேர் அங்கிருந்து துரத்தப்பட்டனர். அவர்கள் சொந்த நாட்டிலேயே பல ஆண்டுகளாக அகதிகளாக வாழ்ந்தனர் எனது வரலாறு. தற்போது பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசுதான், அங்கு சட்டப்பிரிவு 370ஐ நீக்கி காஷ்மீர பண்டிட்டுகளுக்கு ஒரு விடிவுகாலம் அளித்துள்ளது. அவர்களையும் அங்கு வாழ்ந்த பட்டியலினத்தை சேர்ந்தவர்களையும் மீள்குடியேற்றம் செய்து வருகிறது. அவர்களிடம் இருந்து முஸ்லிம்களால் பிடுங்கப்பட்ட நிலங்கள் கைப்பற்றப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன. ஜம்மு காஷ்மீர் பா.ஜ.கவும் ராகுலின் இந்த அரைவேக்காட்டுத்தனமானப் பேச்சுக்கு கண்டனம் தெரிவித்துள்ளது. இந்நிலையில், ராகுலின் தாத்தா பெரோஸ்கான் ஒரு முஸ்லிம், இவரது தாய் இத்தாலியை சேர்ந்த கிறிஸ்தவர் அப்படி இருக்கும்போது இவர் மட்டும் எப்படி காஷ்மீர் பண்டிட் ஆக முடியும்!? என நெட்டிசன்கள் கிண்டலடித்து வருகின்றனர்.

# முஸ்லிம் நடிகர் விநாயகர் வழிபாடு

பிரபல முஸ்லிம் பாலிவுட் நடிகரான சைஃப் அலிகான், அவரது மனைவியும் நடிகையுமான கரீனா கபூர் இருவரும் தங்கள் மகன் தைமூருடன் விநாயகர் சதுர்த்தி அன்று தங்கள் வீட்டில் விநாயகர் சிலை வைத்து வழிபாடு செய்த புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் வெளியானது. இதனையடுத்து பல முஸ்லிம்கள் இணையதளத்தில் சைஃப் அலிகான் குடும்பத்திற்கு பலத்த கண்டனம் தெரிவித்தனர். அவரை முஸ்லிம் மதத்தில் இருந்து வெளியேற்ற வேண்டும், அவர் தனது பெயரை சுரேஷ் கபூர் என மாற்றி வைக்க வேண்டும், காபிர்கள் என பல்வேறு தூஷணைகள் அவர்கள் மீது சுமத்தப்பட்டன. முன்னதாக சைஃப் அலிகான், கரீனா தம்பதியினர் தங்கள் முதல் மகனுக்கு இனப்படுகொலை செய்த கொடுங்கோலன் தைமூரின் பெயரை வைத்தனர். அடுத்த குழந்தைக்கு ஐந்தாவது சீக்கிய குரு அர்ஜன் தேவை கொன்ற ஜஹாங்கீரின் பெயரை சூட்டியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருடனுக்கு தேள் கொட்டியதுபோல



காரைக்குடியில் பா.ஜ.க முன்னாள் தேசிய செயலாளர் ஹெச். ராஜா தனது இல்லத்தில் 6 அடி விநாயகர் சிலையை வைத்து வழிபாடு செய்தார். அப்போது பேசிய அவர், ” தமிழகத்தில் ஆண்டுதோறும் விநாயகர் சதுர்த்தியன்று பொது இடங்களில் விநாயகர் சிலைகளை வைத்து வழிபட்டு ஊர்வலமாக சென்று கரைப்பது வழக்கம். கொரோனா வழிகாட்டுதலை பின்பற்றுவதாக கூறிய பிறகும் விநாயகர் சதுர்த்தி விழாவுக்கு தமிழ அரசு தடை விதித்துள்ளது. பக்ரித் பண்டிக்கையின் போது வீதிகளில் தொழுகைக்கு அனுமதி அளித்தனர். அது எந்த விதத்தில் நியாயம்? கொரோனா வழிகாட்டுதலை அனைத்து மதத்திற்கும் சரியாக பின்பற்றினால் அது நேர்மையான அரசு. கரூரில் ஒரு காவல் அதிகாரி விநாயகர் சிலையை உடைக்கிறார், தமிழகம் முழுவதும் விநாயகர் சிலை செய்யும் இடங்களில் பூட்டு போடப்பட்டுள்ளது. காவல்துறை விநாயகர் சிலையை திருடுவது அராஜாகத்தின் உச்சகட்டம். தமிழக ஆளுநராக பன்வாரிலால் புரோகித் சிறப்பாக செயல்பட்டார். முன்னாள் ஐ.பி.எஸ் காவல் அதிகாரி, உளவுதுறையில் பணிபுரிந்தவர், மத்திய அரசின் பாதுகாப்புத் துணை ஆலோசகராகவும், நாகலாந்து ஆளுநராகவும் பணியாற்றிய ஆர்.என். ரவி. புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டதை தமிழக முதல்வர் வாழ்த்து கூறி வரவேற்றுள்ளார். ஆனால், திருடனுக்கு தேள் கேட்டியது போல் ஆளுநர் மாற்றத்திற்கு காங்கிரஸ் தலைவர் அழகிரி அலறுகிறார். ஏன் என்று தெரியவில்லை. ஆளுநர் மாற்றம் எங்கோ நெறி கட்டுகிறது' என தெரிவித்தார்.

# தொழில்துறை உற்பத்தி அதிகரிப்பு

பாரதத்தின் தொழில்துறை உற்பத்தி விகிதமானது கடந்த ஜூலை மாதத்தில் 11.5 சதவீதமாக வளர்ச்சி கண்டுள்ளது. இந்த ஜூலை மாதத்தில் சுரங்க உற்பத்தி துறை வளர்ச்சி விகிதமானது 19.5 சதவீதமாகவும் மின்சாரத்துறை உற்பத்தி 11.1 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டில் உலகளாவிய கொரோனா பொதுமுடக்கம் காரணமாக இந்த உற்பத்தி விகிதங்களானது மிக பலமான சரிவினைக் கண்டன. முந்தைய ஆண்டில் தொழில்துறை வளர்ச்சி 10.5 சதவீதமாக வீழ்ச்சி அடைந்திருந்தது. இந்நிலையில், தற்போது மீண்டும் தொழில்துறை வளர்ச்சி பாதைக்கு திரும்பிக் கொண்டுள்ளது. இது பொருளாதாரம் மீண்டும் மீட்சி பெற்று வருவதையே காட்டுகிறது. தற்போது மத்திய அரசு பல துறைகளிலும் ஊக்குவிப்பு சலுகைகளை அறிவித்து வரும் நிலையில், பொதுமுடக்கத் தளர்வுகள் காரணமாக இனி அடுத்து வரும் மாதங்களில் வளர்ச்சி மேலும் அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் வேலை வாய்ப்பு விகிதங்களும் வளர்ச்சி பாதைக்கு திரும்பும்.

# பெண் காவலரை கொன்ற நிஜாமுதீன்



டெல்லியில் ரபியா சைஃபி என்ற பெண் காவலர் ஒருவர் சில நாட்களுக்கு முன்பு கடத்தப்பட்டு, அடித்துத் துன்புறுத்தப்பட்டு, மார்பகங்கள் அறுக்கப்பட்டு உடலில் 50 இடங்களில் கத்தியால் குத்தப்பட்டு, பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொடூரமாக கொலை செய்யப்பட்டார். அவர் முஸ்லிம் பெண் என்பதால் தமிழகத்தில் உள்ள சில முஸ்லிம் அமைப்பினர் உட்பட பலரும் இதனை கண்டித்தனர், கொலையாளிகளை கைது செய்ய வலியுறுத்தினர். இந்நிலையில், கொலை செய்யப்பட்ட பெண் காவலரின் நண்பர்களில் ஒருவரான நிஜாமுதீன் என்பவன் நான்தான் அந்த கொலையை செய்தேன் எனக் கூறி காவல் நிலையத்தில் சரணடைந்தான். விசாரணையில், அவர்கள் இருவரும் பல வருடங்களாகக் காதலித்துவந்ததாகவும், அந்தப் பெண்ணின் பெற்றோர் காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்ததால், இருவரும் வீட்டைவிட்டு வெளியேறி திருமணம் செய்துகொண்டு தனியாக வசித்துவந்தனர் என்றும் கூறியிருக்கிறான். மேலும், அந்த பெண் வேறு ஒரு நபருடன் தொடர்பில் இருந்ததால் கொலை செய்ததாகக் கூறியுள்ளான். கொலைகாரன் கிடைத்துவிட்டான் ஆனால், இதற்கு நியாயம் கேட்டவர்கள்தான் இது குறித்து இன்னும் வாய் திறக்கவில்லை!!!

# வாகனங்களில் தலைவர் படங்கள்




மதுரை வழக்கறிஞர் ரமேஷ் தாக்கல் செய்த பொதுநல மனுவை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை, 'வாகனங்களில் கட்சிக் கொடிகள், தலைவர்களின் படங்கள், வழக்கறிஞர், ஊடகம் ஸ்டிக்கர்களை ஒட்டி குற்றங்களில் ஈடுபடுகின்றனர். கொடி, பதவி, பெயர் பலகை, கட்சி அல்லது சமுதாய தலைவர்களின் படங்கள், ஸ்டிக்கர்களை வாகனங்களில் அதன் உரிமையாளர்கள் பயன்படுத்த, மோட்டார் வாகனச் சட்டத்தில் வழிவகை இல்லை. இவ்வாகனங்களை சோதனையிட்டால் பிரச்னை ஏற்படும் எனக் கருதி போலீசார் தயங்குகின்றனர். அவற்றை பொருட்படுத்தாமல், வாகனங்களை போலீசார் சோதனையிட வேண்டும். எனினும், தேர்தல் நேரத்தில் வாகனங்களில் கட்சி கொடிகள் இடம்பெறுவதன் அவசியத்தை நீதிமன்றம் புரிந்து கொள்கிறது. சாதாரண நாட்களில் வாகனங்களில் தலைவர்கள் படம் கட்சியின் சின்னங்கள் அகற்றப்பட வேண்டும் அதேபோல, வண்ண கண்ணாடிகள், டின்ட் கிளாஸ்கள் 60 நாட்களில் அகற்ற, உரிமையாளர்களுக்கு அரசுத் தரப்பில் அறிவுறுத்த வேண்டும். தவறினால் படங்களை அரசுத் தரப்பில் அகற்றிவிட்டு உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்க வேண்டும்' என தெரிவித்துள்ளது.

# பல்கலைக்கழக நிலம் கையகப்படுத்தப்பட்டது

சர்ச்சைகளுக்கு புகழ் பெற்ற சமாஜ்வாடி கட்சியின் மூத்த உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆஸம் கான் ஏற்கனவே பல்வேறு ஊழல், முறைகேடு புகார்களில் சிக்கி தற்போது தன் மகனுடன் சிறையில் உள்ளார். இவரது குடும்பத்தினரின் தலைமையிலான மவுலானா முஹம்மது அலி ஜவஹர் அறக்கட்டளையால் நடத்தப்படும் முகமது அலி ஜவஹர் பல்கலைக்கழகத்தால் 70.05 ஹெக்டேர் நிலம் 2005 முதல் முறைகேடாக ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. இந்த நிலத்தை ஒப்படைக்க உத்தரபிரதேச அரசின் ராம்பூர் மாவட்ட நிர்வாகம் நோட்டீஸ் அனுப்பியது. இதனை எதிர்த்து பல்கலைக்கழகம் சார்பில் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. நீதிமன்றத்தால் அந்த மேல்முறையீட்டு மனு நிராகரிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து மாவட்ட நிர்வாகம் அந்த நிலத்தை அதிரடியாக கையகப்படுத்தியது.




# சோதனைக் சாவடிகள் தேவையில்லை



சமீப காலமாக சாலை போக்குவரத்துத்துறை பல்வேறு பெரிய மாற்றங்களைக் கண்டு வருகிறது. பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள், அறிவியல் தொழில்நுட்ப பயன்பாடு, வேகமாக போடப்படும் தரமான சாலைகள், அவசரகால விமானங்கள் இறங்கும் வசதி, ஃபாஸ்ட் டேக் என பல அதிரடி மாற்றங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது. இதனால், தாமதமற்ற விரைவான போக்குவரத்து சத்தியமாகி வருகிறது. இந்நிலையில், மத்திய அமைச்சர் நிதின் கட்கரி தலைமையிலான சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகம், மாநில எல்லைகளில் உள்ள சோதனைச் சாவடிகளை அகற்றுமாறு மாநில அரசுகளைக் கேட்டுக் கொண்டுள்ளது. சரக்கு மற்றும் சேவை வரி (ஜி.எஸ்.டி) அமல்படுத்தப்பட்ட பிறகு, இனிமேல் இத்தகைய சோதனைசாவடிகள் தேவையில்லை. வாகனங்கள், ஓட்டுநர்கள் தொடர்பான ஆன்லைன் தரவு அமைச்சகத்தின் வாகன் மற்றும் சாரதி போர்டல் மூலம் வலுப்படுத்தப்பட்டுள்ளது. சுங்கச்சாவடிகளில் விரைவான இயக்கத்தை உறுதி செய்ய ஃபாஸ்டேக் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, மாநில அரசுகள் தங்கள் எல்லைகளில் உள்ள சோதனைச் சாவடிகளை அகற்றுவது தொடர்பான தற்போதைய நிலை குறித்த அறிக்கையை விரைவில் தாக்கல் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.



# ரயில்வேயின் யாத்திரை

உள்நாட்டு சுற்றுலாவை ஊக்குவிக்கும் நோக்கில், இந்திய ரயில்வே வரும் நவம்பர் 7 முதல் 'தேக்கோ அப்னா தேஷ்' என்ற சுற்றுலா ரயிலை இயக்க உள்ளது. இதில் பகவான் ஸ்ரீ ராமரின் வாழ்க்கையுடன் தொடர்புடைய அனைத்து முக்கிய இடங்களையும் சென்று தரிசிக்கும் வகையில் ஸ்ரீ ராமாயண யாத்திரை இடம்பெறுகிறது ஐஆர்சிடிசியால் இது நிர்வகிக்கப்படுகிறது. அடுத்த மாதம் டெல்லியின் சப்தர்ஜங் ரயில் நிலையத்தில் இருந்து இந்த சுற்றுலா யாத்திரை துவங்குகிறது. பல நவீன அம்சங்கள், வசதிகளுடன் கூடிய டீலக்ஸ் ஏசி சுற்றுலா ரயில் இந்த சேவையில் ஈடுபடுத்தப்படும். 17 நாட்கள் சுற்றுலாவிற்கு இதில், 2ம் வகுப்பு ஏ.சி பெட்டியில் பயணிக்க ஒரு நபருக்கு ரூ. 82,950 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2 டோஸ் கொரோனா தடுப்பூசி போட்டவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படுகிறது.

# எரிபொருள் துறையில் கூட்டு



டெல்லியில், அமெரிக்க பாரத தூய்மை எரிசக்தி கூட்டுறவு திட்டத்தின் கூட்டம் நடைபெற்றது. இதில், பெட்ரோலியத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் புரி மற்றும் அமெரிக்க எரிசக்தி துறை அமைச்சர் ஜெனிபர் கிரான்ஹோம் ஆகியோர், இணைய வாயிலாக பங்கேற்றனர். இத்திட்டத்தில் சுற்றுச்சூழலை மாசுபடுத்தாத தூய்மையான எரிபொருள்களை கண்டுபிடிப்பதில் பாரதம் அமெரிக்கா இணைந்து செயல்பட முடிவு செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசு, வரும் 2030ல் 450 ஜிகாவாட் புதுப்பிக்க எரிசக்தி உற்பத்திக்கான இலக்கை நிர்ணயித்து, அதற்காக தீவிரமாக பணியாற்றி வருகிறது. இதற்கு, அமெரிக்க எரிசக்தித்துறை அமைச்சர் பாராட்டு தெரிவித்தார்.



# இடைமறிக்கும் ஏவுகணைகள்

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பான டி.ஆர்.டி.ஓ, இந்த வருட தொடக்கத்தில் இரண்டு VLSRSAM ரக ஏவுகணைகளை வெற்றிகரமாக பரிசோதனை செய்தது இது இந்திய கடற்படைக்கான பிரத்தியேக ஏவுகணைகள். இதனை தொடர்ந்து தற்போது இந்திய விமானப்படையின் தேவைக்கேற்ப VLSRSAM (QR) ரக ஏவுகணைகளை

தயாரிக்கும் பணி துவங்கி உள்ளது. 4 செல்களை கொண்டிருக்கும் இந்த ஏவும் அமைப்பானது ஒரு 4×6 லாரியில் பொருத்தப்பட்ட நிலையில் இருக்கும், 360 டிகிரி கோணத்தில் சுற்றி இயங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு வருருகிறது. அடுத்தடுத்த மாதங்களில் டி.ஆர்.டி.ஓ இந்திய கடற்படை மற்றும் விமானப்படைக்கான ஏவுகணை ரகங்களை சோதனை செய்ய உள்ளன.



# ஸ்வயம்சேவகத் தன்மை

**1925** விஜயதசமி அன்று துவக்கப் பட்டாலும், ஆரம்பத்தில் ஸ்வயம்சேவகர்கள் உடற்பயிற்சி சாலைகளுக்குச் சென்று பயிற்சி செய்துவர ஆரம்பித்தனர். வெவ்வேறு உடற்பயிற்சி சாலைகளுக்குள் போட்டியும் தகராறுகளும் நிலவியதால் மைதானத்தில் சென்று பயிற்சி செய்யலாம் என்று முடிவெடுத்தார்கள். அதற்கு முதலில் அவர்கள் தேர்ந்தெடுத்த இடம் 'இத்வார் தர்வாஜா துவக்கப்பள்ளி'. ஆனால் பயிற்சிக்கு வருவோர் எண்ணிக்கை அதிகரித்ததால் புதிய இடம் தேடவேண்டியதாயிற்று.

மோகிதே வாடா என்ற பாழடைந்த கோட்டைக்கு அருகில் இருந்த மைதானத்தில் பயிற்சி செய்யலாம் என முடிவாயிற்று. மைதானம் மிகவும் அசுத்தமான நிலையில் இருந்தது. ஆனால் பயிற்சிக்காக ஸ்வயம்சேவகர்கள் வந்தபோது மைதானம் ஏற்கனவே சுத்தம் செய்யப்பட்டு இருந்தது. டாக்டர்ஜி மண்வெட்டி, தட்டு எடுத்து மைதானத்தை சுத்தப் படுத்தியிருந்தார். அதை அறிந்துகொண்ட ஸ்வயம்சேவகர்கள் ஊக்கம் பெற்று அவர்களும் ஈடுபட்டனர். டாக்டர்ஜி மோகிதே வாடா சங்கஸ்தானத்தைத் தானே முன்னுதாரணமாக நின்று சுத்தம் செய்து சங்கத்தின் தலைமை தாங்கும் பாணியும், ஸ்வயம்சேவகத் தன்மையும் எவ்விதம் இருக்க வேண்டும் என்ற முதல் பாடத்தை தன் செயல்பாட்டின் மூலம் அனைவருக்கும் புகட்டினார்.

# முக்கியத்துவம்



கிருஷ்ணப்பாஜி பிரவாஸ் நேரத்தில் நடந்த சம்பவம். அவர் ஒருமுறை ஷாகா முடித்துவிட்டு ஸ்வயம்சேவக் வீட்டிற்கு உணவுக்காக சென்று இருந்தார். அப்போது அங்கிருந்த ஸ்வயம்சேவக் அம்மா கொஞ்ச நேரம் காத்திருங்கள். ஜி வந்துவிடட்டும் என்று கூறினார்கள். இதை கேட்ட கிருஷ்ணப்பாஜி யாரோ முக்கிய காரியகர்த்தர் வருவார்கள் என்று எதிர்பார்த்தார். ஆனால் சிறிது நேரம் கழித்து அந்த ஷாகாவின் கட்டாயக் வீட்டிற்கு வந்தார். 9வது படிக்கும் அந்த மாணவரை அம்மா மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்றார். கட்நாயக்குக்கு ஏன் அவ்வளவு மரியாதை என்று விசாரித்த போது, வீட்டின் வெளியே காலணிகளை அடுக்கி வைப்பது, அலமாரியில் புத்தகங்களை அடுக்கி வைப்பது, வீட்டில் மற்ற பொருட்களை நேர்த்தியாக வைப்பது என்று அவர்களை பழக்கபடுத்தியுள்ளார். எனவே அவருக்கு அந்த வீட்டில் இவ்வளவு முக்கியத்துவம்.